பாபு தையல் இயந்திரம் திருத்துமிடம்

0776906182

தினப்புயல்
THINAPPUYAL
PIN news
REGISTERED AS A NEWS PAPER AT THE DEP. of . N.A :- RBN/4/3/06

கலையரசி நகைமாடம்

T.P- 0770457661

மலர்-02 Tel&Fax:- 0242227558, Hot line: 0711850885. Email:thinappuyal2014@gmail.com, www.thinappuyalnews.com இதழ் – 67

## புதிய இராணுவத் தளபதி கடமைகளை பொறுப்பேற்றார்

இலங்கை இராணுவத்தின் 24வது தளபதியாக நியமிக்கப்பட்ட லெப்டினன்ட் ஜெனரல் விகும் லியனகே சற்றுமுன்னர் தமது கடமைகளை பொறுப்பேற்றார்.

நேற்று (31) முற்பகல் கோட்டை ஜனாதிபதி மாளிகையில் வைத்து விகும் லியனகே விடம் ஜனாதிபதி அவருக்கான நியமனக் கடிதத்தை கையளித்திருந்தார்.

தற்போது இராணுவத்தில் மிகவும் சிரேஷ்ட அதிகாரியாக இருக்கும் விக்கும் லியனகே, இராணுவத் தளபதியாக கடமைகளை பொறுப்பேற்றுக்கொள்வதன் மூலம் இன்று முதல் (01) லெப்டினன்ட் ஜெனரலாக பதவி உயர்வு பெற்றுள்ளார்.



## ஹஜ் யாத்திரை குறித்து இலங்கை எடுத்துள்ள அதிரடி தீர்மானம்

இந்த வருடம் முஸ்லிம்கள் ஹஜ் யாத்திரையில் கலந்து கொள்ளமாட்டார்கள் என முஸ்லிம் சமய கலாசார அலுவலகள் திணைக்களம் அறிவித்துள்ளது. நாட்டில் நிலவும் பொருளாதார நெருக்கடி காரணமாக இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

இந்த ஆண்டு 1,585 இலங்கையர்களுக்கு ஹஜ் யாத்திரையில் பங்குகொள்ளும் வாய்ப்பு கிடைத்தது. எனினும் டொலர்கள் தட்டுப்பாடு காரணமாக இம்முறை ஹஜ் பயணத்தில் கலந்துகொள்வதில்லை என தீர்மானித்துள்ளனர். தேசிய ஹஜ் குழு, ஹஜ் சுற்றுலா அமைப்பு மற்றும் முஸ்லிம் சமய மற்றும் கலாசார அலுவலகள் திணைக்களம் ஆகியவற்றுக்கு இடையில் இடம்பெற்ற கலந்துரையாடலின் பின்னர் இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.



## 8 மாவட்டங்களுக்கு மண்சரிவு எச்சரிக்கை

நாட்டின் எட்டு மாவட்டங்களுக்கு மண்சரிவு எச்சரிக்கை அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளது. கொழும்பு, காலி, களுத்துறை, நுவரெலியா, மாத்தறை மாவட்டங்களில் வசிக்கும் மக்கள் இதுபற்றி எச்சரிக்கையாக இருப்பது அவசியமாகும். கேகாலை மாவட்டத்தின் தெஹியோவிட்ட, புளத்கொஹுபிட்டிய, வரக்காபொல ஆகிய நகரங்களுக்கும், மாத்தறை மாவட்டத்தின் கொட்டபொல, பிட்டபெத்தர ஆகிய பகுதிகளுக்கும் இரண்டாம் கட்ட மண்சரிவு எச்சரிக்கை அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளது.

இரத்தினபுரி மாவட்டத்தின் கிரி-அல்ல, பெல்மடுல்ல, அயகம, நிவித்திகல ஆகிய பிரதேசங்களிலும் மண்சரிவு அபாயம் காணப்படுகிறது. இரத்தினபுரி மாவட்டத்தின் அலபாத்த, கலவான, குருவிட்ட, எஹலியகொட ஆகிய நகரங்களுக்கு மண்சரிவு தொடர்பான சிவப்பு எச்சரிக்கை அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளது. மண்சரிவு பற்றிய அறிகுறிகள் தென்படுமாயின் அங்குள்ளவர்கள் உடனடியாக பாதுகாப்பான பகுதிகளுக்குச் செல்வது அவசியமாகும். இதுபற்றிய மேலதிக தகவல்களை 117 என்ற தொலைபேசி இலக்கத்தின் ஊடாக தொடர்பு கொண்டு பெற்றுக்கொள்ள முடியும்.

நாட்டின் பல்வேறு ஆறுகளினதும் நீர்மட்டம் அதிகரித்திருக்கிறது. மாதுலுஓயா, குடாகங்கை என்பனவற்றின் நீர்மட்டம் அதிகரித்துள்ளமையால் பத்தேகம, வெலிவிட்ட, நியாமகம, நெலுவ, அக்மீமன, நாகொட, அல்பிட்டிய, போபே, போத்தல ஆகிய இடங்களின் தாழ்நிலப் பிரதேசங்களில் சிறு வெள்ளம் ஏற்படலாம். நில்வளா கங்கை - அளுத்கம - கல்ஹாகொட ஆகிய பகுதிகளில் பெருக்கெடுக்கலாம். குக்குலே கங்கை, தெதுறுஓயா ஆகிய நீர்த்தேக்கங்களின் வான்கதவுகள் திறக்கப்பட்டுள்ளமையால் பிரதேச வாசிகள் எச்சரிக்கையாக இருக்க வேண்டுமென்று திணைக்களம் அறிவுறுத்தியுள்ளது.

## O/L மாணவர்களுக்கு பரீட்சைகள் திணைக்களம் விசேட அறிவித்தல்

தற்போது க.பொ.த சாதாரண தர பரீட்சைக்கு தோற்றும் அனைத்து பரீட்சார்த்திகளுக்கும் பரீட்சைகள் திணைக்களம் விசேட அறிவித்தல் ஒன்றை விடுத்துள்ளது.

தற்போது நாட்டில் நிலவும் சீரற்ற வானிலை தொடர்பில் இந்த அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளது.

அதன்படி, வெள்ளம் அல்லது ஏனைய அனர்த்தங்களினால் பரீட்சார்த்திகள் திட்டமிடப்பட்ட பரீட்சை நிலையத்திற்குச் செல்ல முடியாமல் போனால் அருகில் உள்ள பரீட்சை நிலையத்திற்குச் சென்று க.பொ.த சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்ற முடியும் என பரீட்சைகள் திணைக்களம் அறிவித்துள்ளது.



# பொருளாதார நெருக்கடியை சமாளிக்க சீனா உதவி

சீன அரசாங்கத்தால் 500 மில்லியன் யுவான் மானியமாக வழங்க உள்ளதாகவும். அதன் முதல் தொகுதி வெள்ளிக்கிழமை நாட்டிற்கு வரும் என கொழும்பில் உள்ள சீன தூதரகம் தெரிவித்துள்ளது. இலங்கை அதிகாரிகளால் அனுப்பப்பட்ட கோரிக்கைக்கு அமைவாக. இலங்கைக்கு தேவையான வாழ்வாதார உதவிகளை வழங்க பிரதமர் லீ கெகியாங் நடவடிக்கை எடுத்துள்ளதாக சீன தூதரகம் மேலும் தெரிவித்துள்ளது. நாடு எதிர்கொண்டுள்ள பொருளாதார நெருக்கடியை சமாளிக்க சீன தூதுவர் Qi Zhenhong. 5 வகையான உதவிகள் தொடர்பில் விபரித்துள்ளார். அதாவது வேகமாக செயல்படுத்தப்பட்டு வரும் திட்டங்கள். அதிகளவான வெளிநாட்டு நேரடி முதலீடு. வர்த்தகம். இரு தரப்பு கடன் தீர்வு மற்றும் இலங்கைக்கான ஆதரவு ஆகியவற்றை கருத்தில் கொண்டு சீனாவிடம் இருந்து இலங்கைக்கு ஐந்து வழி முறையிலான உதவிகளை எடுத்துரைத்தார்.

கடந்த மே 24 அன்று அவர் தனது மனைவி ஜின் கியான் உடன் இலங்கையின் கிழக்கு மாகாணத்திற்கு மூன்று நாள் பயணத்தை திருகோணமலையில் இருந்து தொடங்கினார். இவர்களுக்கு ஆளுநர் மற்றும் பல்வேறு தரப்பினரின் அன்பான வரவேற்பு அளிக்கப்பட்டது. தூதுவர் மற்றும் அவரது மனைவி Jin Qian. சீன வர்த்தக சபை பிரதிநிதிகளுடன் வணிக மன்றத்தில் சந்திப்பு இடம்பெற்றது. அதன்போது இலங்கை எதிர்கொண்டுள்ள தற்போதைய பொருளாதார நெருக்கடிகளை சமாளிக்க. சீன அரசு அதிக முதலீட்டை வழங்கி ஊக்குவிக்க எண்ணி உள்ளதாக தெரிவித்துள்ளார்.

குறித்த சந்திப்பின் பின்னர் இருவரும் திருகோணமலை துறைமுகம் மற்றும் சீன குடாவிற்கு படகு மூலம் விஜயம் செய்தனர். மேலும் இலங்கை துறைமுக அதிகார சபையும் கிழக்கு மாகாணமும் துறைமுகம் தொடர்பான கைத்தொழில் மற்றும் சுற்றுலா துறைகளில் முதலீடு செய்ய சீனா தீர்மானித்துள்ளது. அத்துடன் குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்கு உதவி செய்வதற்காக சீனாவின் யுனான் மாகாண மக்களால் வழங்கப்பட்ட நிவாரண பொதிகளை திருகோணமலை. மட்டக்களப்பு மற்றும் அம்பாறை மாவட்டங்களில் 5 ஆயிரத்து 200 பெறுமதியான உணவுப் பொதிகளை தூதுவர் வழங்கினார். மொத்தமாக கிழக்கு மாகாணத்தில் உள்ள 10 ஆயிரத்து 400 பின்தங்கிய குடும்பங்களுக்கு யுனான் மாகாண மக்களின் நன்கொடை நிவாரணப் பொதிகள் வழங்கப்பட்டன.

அதன் பின்னர் தூதுவர் மற்றும் அவரது மனைவி இணைந்து கல்முனையில் உள்ள உள்ளூர் இளைஞர்களுக்கு விளையாட்டு உபகரணங்களையும் அன்பளிப்பு செய்தனர். மே 26 அன்று தூதுவர். காயங்கேனி தொல்பொருள் ஆராய்ச்சி நிலையத்திற்கு விஜயம் செய்தனர். கல்லடி பாலம். இலங்கையின் கிழக்கு கடற்கரை எப்போதும் கடல்சார் பட்டுப் பாதையில் முக்கிய வர்த்தக மையமாக காணப்பட்டதாக அவர் தெரிவித்தார். தூதுவர் தனது விஜயத்தின் போது குச்சவெளி பிச்சமல் விகாரைக்கும் விஜயம் செய்தார்.
(அரசாங்க தகவல் திணைக்களம்)

# பங்களாதேஷ் டெஸ்ட் தலைவர் ராஜினாமா

*பங்களாதேஷ் டெஸ்ட் கிரிக்கெட் அணியின் தலைவர் பதவியில் இருந்து மொமினுல் ஹக் விலகியுள்ளார்.*

*சமீபத்தில் இலங்கைக்கு எதிரான டெஸ்ட் போட்டியில் தோல்வி அடைந்ததால் அவர் அந்த முடிவை எடுத்துள்ளதாக கூறப்படுகிறது.*

*அவர் 2019 ஒக்டோபர் முதல் 17 டெஸ்டுகளில் அணியை வழிநடத்தியுள்ளார். அவற்றில் மூன்றில் மட்டுமே வெற்றி பெற்றுள்ளார்.*

*12 போட்டிகளில் தோல்வியடைந்துள்ள நிலையில் இரண்டு போட்டிகள் சமநிலையில் முடிவடைந்துள்ளன.*

*பங்களாதேஷ் டெஸ்ட் அணியின் அடுத்த தலைவராக ஷாகிப் அல் ஹசன் வர வாய்ப்புள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.*




# சீனாவின் ஷாங்காய் நகரில் ஊரடங்கு விலக்கி கொள்ளப்பட்டதால் பொதுமக்கள் நிம்மதி

*சீனாவின் ஷாங்காய் நகரில் கடந்த இரண்டு மாத கால ஊரடங்கு சில கட்டுப்பாடுகளுடன் விலக்கி கொள்ளப்பட்டது. ஷாங்காய் அதிகாரிகள் வீட்டு வளாகங்களைச் சுற்றியுள்ள வேலிகளை அகற்றத் தொடங்கினர். இதன் மூலம், நகரத்தின் 25 மில்லியன் குடியிருப்பாளர்களும் விடுதலை அடைந்தது போல் உணர்ந்தனர். நேற்று முதல் பொது போக்குவரத்து மீண்டும் தொடங்கும் மற்றும் மக்கள் வேலைக்கு செல்லலாம். ஆனால், பொதுப் போக்குவரத்தைப் பயன்படுத்தவும் பொது இடங்களுக்குள் நுழையவும் பொதுமக்கள் ஒவ்வொரு 72 மணி நேரத்திற்கு ஒருமுறை கொரோனா பரிசோதனை செய்து கொரோனா இல்லை என்று முடிவுகள் பெற்றிருக்க வேண்டும். பரிசோதனையில் கொரோனா உறுதி செய்யப்பட்டால், அவருக்கும் அவர்களின் நெருங்கிய தொடர்புகளுக்கும் கடுமையான தனிமைப்படுத்தல் விதி இன்னும் அமுலில் உள்ளது.*

*எனினும், ஷாங்காய் நகரவாசிகள் இன்னும் முகக்கவசம் கட்டாயம் அணிய வேண்டும் மற்றும் பொது இடங்களில் ஒன்றுகூடுவதை தவிர்க்க வேண்டும். உணவகங்களுக்குள் அமர்ந்து உணவருந்துவது தடை செய்யப்பட்டுள்ளது. கடைகள் 75 சதவீத திறனில் செயல்படலாம் என்பன போன்ற கட்டுப்பாடுகள் அமுலில் உள்ளன. ஷாங்காய் நகரில் நேற்று 31 பேர் புதிதாக கொரோனா தொற்றால் பாதிக்கப்பட்டனர். ஒரு நாளுக்கு முன்பு 67 ஆக இருந்த கொரோனா பாதிப்பு நேற்று சற்று குறைந்தது. சீனாவின் பல நகரங்களிலும் கொரோனா பாதிப்பு குறைந்து வருகிறது. இந்த கடுமையான ஊரடங்கு, பொதுமக்களிடம் கடும் ஆத்திரத்தை தூண்டியது. அவர்கள் தங்கள் வீட்டிலிருந்து பூந்தொட்டி மற்றும் பொருட்களை விரக்தியில் தூக்கி போட்டு உடைத்து தங்களது எதிர்ப்பை வெளிக்காட்டினர். இந்த ஆண்டு அதிபர் தேர்தல் நடைபெற உள்ள நிலையில், தற்போதைய சீன அதிபர் ஜி ஜின்பிங் மீதான மக்களின் அதிருப்தியை அதிகரிக்க செய்தது.*

# மே மாதத்தில் உச்சத்தை எட்டிய பணவீக்கம்

இலங்கையின் வரலாற்றில் அதிகபட்ச பணவீக்க விகிதம் 2022 மே மாதம் பதிவாகியுள்ளது. தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம் வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே. தேசிய நுகர்வோர் விலைக் குறியீட்டில் வருடாந்த புள்ளி மாற்றத்தால் அளவிடப்படும் முதன்மைப் பணவீக்கம் ஏப்ரல் மாதத்தில் 39.1 % ஆக பதிவாகியுள்ளது. மேலும். உணவுப் பணவீக்க விகிதம் 57.4 சதவீதமாக அதிகரித்துள்ளதாக திணைக்களம் குறிப்பிட்டுள்ளது. அதேபோல். உணவு அல்லாத பணவீக்கம் 30.6 சதவீதம் வரை அதிகரித்துள்ளதாக தொகை மதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

இது தொடர்பில் தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம் வெளியிட்டுள்ள அறிக்கை கீழே...

கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணை அடிப்படையாகக் கொண்ட முதன்மைப் பணவீக்கம் 2022 மேயில் ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில் மேலும் அதிகரித்தது. கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணின் (கொநுவிசு. 2013=100) ஆண்டிற்கு ஆண்டு மாற்றத்தினால் அளவிடப்பட்டவாறான முதன்மைப் பணவீக்கம். 2022 ஏப்பிரலின் 29.8 சதவீதத்திலிருந்து 2022 மேயில் 39.1 சதவீதத்திற்கு அதிகரித்தது. ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையிலான பணவீக்கத்தின் இவ்வதிகரிப்பானது உணவு மற்றும் உணவல்லா வகைகள் இரண்டினதும் மாதாந்த அதிகரிப்புக்களினால் தூண்டப்பட்டிருந்தது. அதனைத் தொடர்ந்து. உணவுப் பணவீக்கம் (ஆண்டிற்கு ஆண்டு). 2022 ஏப்பிரலின் 46.6 சதவீதத்திலிருந்து 2022 மேயில் 57.4 சதவீதத்திற்கு அதிகரித்த அதேவேளை. உணவல்லாப் பணவீக்கம் (ஆண்டிற்கு ஆண்டு) 2022 ஏப்பிரலின் 22.0 சதவீதத்திலிருந்து 2022 மேயில் 30.6 சதவீதத்திற்கு அதிகரித்தது.

கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணின் மாதாந்த மாற்றம். 2022 மேயில் 8.34 சதவீதமாகப் பதிவாகியது. இதற்கு. முறையே 4.87 சதவீதமாகவும் 3.47 சதவீதமாகவும் காணப்பட்ட உணவல்லா மற்றும் உணவு வகைகள் இரண்டினதும் பொருட்களில் அவதானிக்கப்பட்ட விலை அதிகரிப்புக்கள் காரணமாக அமைந்தது.

அதற்கமைய. போக்குவரத்து (பெற்றோல். டீசல் மற்றும் பேருந்துக் கட்டணம்). வீடமைப்பு. நீர். மின்வலு. எரிவாயு மற்றும் ஏனைய எரிபொருட்கள் (திரவப்பெற்றோலிய வாயு மற்றும் பராமரித்தலுக்கான / மீள்கட்டுமானத்திற்கான பொருட்கள்). உணவகம் மற்றும் விடுதிகள் அத்துடன் நானாவிதப் பொருட்கள் மற்றும் சேவைகள் (கார் காப்புறுதி) ஆகிய துணை வகைகளில் அவதானிக்கப்பட்ட விலை அதிகரிப்புக்களைப் பிரதான காரணமாகக் கொண்டு உணவல்லா வகையினுள் உள்ள பொருட்களின் விலைகள் அதிகரிப்புக்களைப் பதிவு செய்தன. மேலும். உணவு வகையினுள் காய்கறிகள். உடன் மீன். அரிசி. பாண். கருவாடு. பருப்பு என்பவற்றின் விலைகளில் மாத காலப்பகுதியில் அதிகரிப்புக்கள் அவதானிக்கப்பட்டன.

அதேவேளை. ஆண்டுச் சராசரி பணவீக்கம் 2022 ஏப்பிரலின் 11.3 சதவீதத்திலிருந்து 2022 மேயில் 14.2 சதவீதத்திற்கு அதிகரித்தது. பொருளாதாரத்தின் அடிப்படை பணவீக்கத்தினைப் பிரதிபலிக்கின்ற மையப் பணவீக்கம். (ஆண்டிற்கு ஆண்டு) 2022 ஏப்பிரலின் 22.0 சதவீதத்திலிருந்து 2022 மேயில் 28.4 சதவீதத்திற்கு அதிகரித்த அதேவேளை. ஆண்டுச் சராசரி மையப் பணவீக்கம். 2022 ஏப்பிரலின் 8.1 சதவீதத்திலிருந்து 2022 மேயில் 10.2 சதவீதத்திற்கு அதிகரித்தது.